செய்தி வெளியீடு எண்: 311 நாள் : 29.06.2016

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி **அம்மா** அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு.கே.டி. ராஜேந்திரபாலாஜி அவர்கள் இன்று (29.6.2016) சென்னை, கிண்டி, அரசினர் தொழில் நுட்ப பயிலகத்திற்கு புதியதாக கட்டப்பட்டு வரும் கட்டுமான பணிகளை பார்வையிட்டார்கள்.

சென்னை கிண்டியில் உள்ள அரசினர் தொழில் நுட்ப பயிலகம், 1962–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. கடந்த 50 ஆண்டுக்கு மேலாக இப்பயிலகம் பொறியியல் கல்வியில் மூன்று ஆண்டு பட்டயப்படிப்பில் கீழ்கண்ட பிரிவுகளில் வழங்கி வருகிறது.

1. கருவி மற்றும் அச்சு பொறியியல்
2. குளிர்சாதனம் மற்றும் காற்று பதன பொறியியல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள் இப்பயிலகத்தை மேம்படுத்துவதற்காக கடந்த 2012–2013–ஆம் ஆண்டு ரூ.120 இலட்சம் ஒதுக்கீடு செய்ததன் பேரில் உள்கட்டமைப்பு பணி நடைபெற்று 2013–2014–ஆம் ஆண்டு முடிக்கப்பட்டது. இதன் மூலம் 2013–14 ஆம் ஆண்டில் மாணவர் சேர்க்கை அதிகரிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

கருவி மற்றும் அச்சு பொறியியல் படிப்பில் 40 மாணவர்கள் என்பதை 60 மாணவர்கள் மற்றும் குளிர் சாதனம் மற்றும் காற்று பதன பொறியியல் படிப்பில் 30 மாணவர்கள் என்பதை 60 மாணவர்கள் என்றும் உயர்த்தப்பட்டு தொழில் நுட்ப கல்வி அளிக்கப்பட்டு வருகிறது. மேலும் 2014–15ஆம் ஆண்டு முதல் இடை சேர்க்கை மூலம் ஆண்டிற்கு 24 மாணவர்கள் கூடுதலாக சேர்க்கப்பட்டு மூன்று ஆண்டுகளுக்கும் சேர்த்து மொத்தம் 408 மாணவர்களுக்கு தொழில் நுட்ப கல்வி அளிக்கப்படுகிறது.

சென்னை கிண்டியில் உள்ள அரசினர் தொழில் நுட்ப பயிலகம் வழங்கும் பட்டய படிப்பு AICTE – யின் அங்கீகாரம் பெற்று நடத்தப்பட்டு வருகிறது. இப்பயிலகத்தில் படிப்பை முடிக்கும் அனைத்து மாணவர்களும் முழுமையான அளவில் வேலை வாய்ப்பை பெற்று வருகின்றனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள், 24.07.2014 அன்று தமிழக சட்டப் பேரவையில் விதி எண்.110 கீழ் சென்னை, கிண்டி, தமிழ்நாடு அரசு தொழில் நுட்ப பயிற்சி நிலையத்திற்கு புதிய கூடுதல் கட்டிடம் சுமார் 30000 சதுர அடியில் (15000 தரை தளம் +15000 முதல் தளம்) கட்டுவதற்கு ரூ.9.00 கோடி ஒதுக்கீடு செய்து அறிவிப்பினை வெளியிட்டார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி **அம்மா** அவர்களின் அறிவிப்பின்படி, இதற்கான கட்டுமானப் பணிகள் பொதுப் பணித்துறையிடம் ஒப்படைக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளை மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் பார்வையிட்டு கட்டுமான பணிகள், மின்சாதன பணிகள் ஆகியவற்றை விரைந்து முடித்திட சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்கள்.

அவ்வமயம், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையின் அரசு முதன்மை செயலாளர் திரு.மங்கத் ராம் சர்மா, இ.ஆ.ப., அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் / தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் திரு.அம்புஜ் சர்மா, இ.ஆ.ப., பொதுப் பணித் துறை அலுவலர்கள் மற்றும் தொழில் வணிக துறை அலுவலர்கள் உடன் இருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**